# இனியும் ஈருடல் ஓருயிராய் வாழ்வார்களாம்!

Phone No 4502
விலை அரை அணா

Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.   MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ]   சென்னை (10—2—50)   வெளியூர் (11—2—50)   [ இதழ் 165

## பிரிட்டிஷார் உதவிகொண்டு பெற்றனராம் சுதந்திரம்!

## அன்றிருந்ததைவிட இன்று அதிகமாக பிரிட்டிஷார் பதவியிலுள்ளனர்!

## ஆகஸ்டு தியாகிகள் முகத்தில் கரிபூசு(ம்) ஹைகமிஷ்னர் கிருஷ்ணமேனன்.

" இந்தியா சுதந்திரமடைந்தது பெரிய காரியமேயாயினும் அது இந்தியர்களால் மட்டுமே சாதிக்கப்பட்டது என்று நாங்கள் கருதவில்லை. இந்திய—பிரிட்டிஷ் கூட்டுறவின் வெற்றியே இந்தியா விடுதலையடையக் காரணமாய் இருந்தது இதுவரை இவ்விரு நாடுகளும் ஒத்துழைத்ததுபோலவே இனியும் ஒத்துழைத்து, பெரும் பிரச்னைகளைத் தீர்ப்பதில் வெற்றி பெறும் என்று நான் எதிர்பார்க்கிறேன்."

" காமன்வெல்த்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் சரிசமத்துவ அந்தஸ்தால் சுதந்திரமாகவே யிருக்கலாம்" என்று செய்யப்பட்ட முடிவு எவ்வித நிர்பந்தத்தின் பேரிலு செய்யப்பட்டதல்ல. நாங்கள் எங்கள் சொந்த விருப்பத்தின் பேரிலேயே காமன்வெல்த்தில் அங்கம் வகிக்கிறோம்."

என்று இந்திய ஹைகமிஷ்னர் தோழர் கிருஷ்ணமேனன் லிவர்பூல் இந்திய கழகத்தில் தனக்களிக்கப்பட்ட விருந்துக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்:—

உலகத்திலேயே மிக நெருக்கடியான கட்டத்தில் நாம் இருக்கிறோம். முரண்பட்ட அரசியல் தத்துவங்களும் பொருளாதார நெருக்கடியும் நிலைமையை மோசமாக்கி வருகின்றன. இந்தியா தீர்க்க வேண்டிய பிரச்னைகள் எவ்வளவோ இருக்கின்றன. இருந்த போதிலும் உலகம் உய்வதற்கு செய்ய வேண்டிய காரியம் எதுவாக இருந்தபோதிலும் அதில் பங்குகொண்டு பணியாற்ற இந்தியா என்று தயாராகவே இருக்கிறது.

"இந்தியாவும் பிரிட்டனும் பரிபூரணமாக ஒத்துழைப்பதால் எவ்வளவோ நன்மை இரு நாடுகளுக்கும் ஏற்பட வழியுண்டு. பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்ததை விட இப்பொழுது அதிகப்படியான பிரிட்டிஷார் பதவியிலிருக்கின்றனர் அவர்கள் சொந்த விருப்பத்தின்பேரிலேயே இந்தியாவின் சேவை செய்து வருகின்றனர்"

என்று பேசியிருக்கிறார்.

தோழர் கிருஷ்ணமேனன் இந்தியாவின் பிரதிநிதி என்ற முறையில், அடல்நாட்டிலிருந்து கொண்டு அகில உலகமும் அறியும்படி மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். எனவே கிருஷ்ணமேனன் கருத்து இந்திய ஆட்சியாளரின் கருத்தாகும்.

இந்தியா விடுதலை பெற காரணமாயிருந்தவை எவை எவையோவென்று யார்யாரோ பேசுவதை நாம் கேட்கிறோம். ஆகஸ்ட்தியாகிகள், தண்டவாளங்களைப் பெயர்த்தல் தந்திகம்பிகளை அறுத்தல், தபால் ஆபீஸ்களைக் கொளுத்தல் ஆகிய அரும் பணிகள் மூலம் வெள்ளையரிடமிருந்து இந்திய சுதந்திரத்தை வெடுக்கென்று பறித்துக்கொண்டு வந்ததாகப் பறைசாற்றுகின்றனர்! இந்திய தேசியஇராணுவத்தினர். தங்களுடைய பணியே வெள்ளையரைப் பயப்படச் செய்து பணிய வைத்தது என்று நினைக்கின்றனர்.

இங்ஙனம் அவரவர்தம் தம் முயற்சியினாலேயே இந்தியா விடுதலை பெற்றதாகப் பெருமிதத்தோடுபேசிக் கொள்ளும் இதே நேரத்தில்தான் 'இந்தியா சுதந்திரமடைந்தது இந்தியர்களால் மட்டுமல்ல; பிரிட்டிஷாருக்கும் இதில் பங்கு உண்டு" என்று பல்லைக் காட்டி பக்குவமாகப் பேசி ஆகஸ்ட் தியாகிகளின் முகத்தில் கரியைப் பூசுகிறார் தோழர் கிருஷ்ணமேனன்! அதுமட்டுமல்ல; இனியும் நாங்கள் ஈருடல் ஓருயிராய் வாழ்வோம்" என்று காதல் மொழிபேசுகிறார். காமன்வெல்த் நாடுகளோடு இந்தியா உறவு கொண்டாடுவது பற்றியும் ஒரு சில சாகச மொழிகளை வீசியிருக்கிறார் அவர். இந்தியா காமன்வெல்த் நாடுகளோடு சரிசமத்துவமாக வாழுகிறதாம்! காமன்வெல்த்தில் இருக்கும்படி யாரும் இவர்களை நிர்பந்தம் செய்யவில்லையாம்!

எப்படி இருக்கிறது பேச்சு! காமன்வெல்த் உறவு காதலா, கட்டாய மணமா என்பதுபற்றி நமக்குக் கவலையில்லை. இந்த உறவு வேண்டாத உறவு; விரும்பத்தக்க உறவல்ல; தொழிலாளர் வர்க்கத்தை வாழவைக்க இந்த உறவு முறைபயன்படாதுஎன்றும்இவை தான் முற்போக்கு கருத்துடையோரின் குற்றச்சாட்டுகள். இந்தக்குற்றச்சாட்டுகளை மறைக்க ஏதேதோ பூசி மெழுகுகிறார்தோழர் கிருஷ்ணமேனன். மேலும் பிரிட்டிஷ் ஆட்சியிருந்தபோது இருந்ததைவிட அதிகப்படியான பிரிட்டிஷார்சுதந்திர இந்தியாவில் பணியாற்றுகின்றனர் என்று வெட்கமின்றி வெளிப்

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

## பனிகட்டிகளுக்குப் பலி

### அறுபத்திரண்டு அரபு அகதிகள் மாண்டனர்

கெய்ரோ, பிப். 9—

மத்யக்கிழக்கில் ஏற்பட்டுள்ள கடும் குளிர் காரணமாக 62 பாலஸ்தீன அரபு அகதிகள் மாண்டிருக்கின்றனர்.

ஸிரியாவில் மிகக்கடும்பனிப்புயல் வீசுகிறது ஹம்மா மாகாணத்தில் ஸலமியா என்ற இடத்தில் பனிக்கட்டி பாறைகள் விழுந்ததின் விளைவாக சிறையின் சுவரே இடிந்து விழுந்து விட்டது அச்சிறையில் குளிரால் விறைத்த கைதிகள் வேறு சிறைக்குமாற்றப்பட்டிருக்கிறார்கள்.

## பாவ்டே சர்க்காரை அங்கீகரிப்பது அரசியல் அவசியமாம்!

### "கார்டியன்" சப்பைக்கட்டு

லண்டன், பிப். 9—

பாவ்டே சர்க்காரை, பிரிட்டன் அங்கீகரித்தது சரியான காரியமல்ல என்றாலும், அம்மாதிரிசெய்யவேண்டி நேர்ந்தது அரசியல் அவசியமாகப் போய்விட்டது என்று அரசியல் விமர்சகர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

இப்பொழுது மூன்று இந்தோசீன பிரதேசங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சுதந்திரத்துடன் இன்னும் அதிகப்படியான அதிகாரங்களைக் கொடுக்கும்படி பிரெஞ்சு சர்க்கார் இதர மேற்கு வல்லரசுகளால் வற்புறுத்தப்படக்கூடும் என்றும் ராஜதந்திர வட்டாரங்களில் கூறப்படுகிறது.

மாஞ்செஸ்டர் கார்டியன் அதன் ராஜ தந்திர நிருபர் எழுதியிருப்பதாவது;—

பாவ்டே முழு இந்தோசீனாவையும் திறம்பட நிர்வகிக்க திறமையற்றவரே. அவரை இந்தோசீன மக்கள் எல்லோரும் ஏற்கவில்லை என்பதும் உண்மையே ஆனால் ஹோச்சிமின் சர்க்காரைவிட இவர் சர்க்கார் எவ்வளவோ மேம்பட்டது என்று கூறலாம். இப்பொழுது நடைபெறும் மிரட்டல் யுத்தத்தில் இந்தோசீனாவில் கம்யூனிஸ்டு ஆதிக்கம் ஏற்படும் படி செய்வது பேராபத்தாகும். பிரிட்டனும் அமெரிக்காவும் அங்கீகரிப்பதினால் பாவ்டேய்க்கு உள்நாட்டிலேயே மதிப்பு ஏற்படும். அப்படி இந்நாடுகள் பாவ்டே நிர்வாகத்தை அங்கீகரிக்க வேண்டியது அத்தியாவசியமுமாகும்.

**ஆஸ்திரேலியா அங்கீகரிக்கும்**

வியட்னாம் ஸாஸ், கம்போடியா சர்க்கார்களை ஆஸ்திரேலியாவும், நியூஜிலாந்தும் இன்னும் இரண்டொரு தினங்களில் அங்கீகரித்து விடும் என்று தெரிகிறது.

அம்மான், பிப் 9—

பாகிஸ்தான் தபால் இலாகாவுக்கு ஜார்டன் சர்க்கார் தன் ஸ்டாம்புகள் கொண்ட ஆல்பத்தைப் பரிசாக அளித்திருக்கிறது.

## வாசகர்களுக்கு!

20—2—1950 முதல் "மாலை மணி" உலகச் செய்திகளைத் தாங்கி பெரிய அளவில்வெளிவருவதற்கான ஏற்பாடுகள் யாவும் துரிதமாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

'மாலை மணி' ஏஜண்டுகள் தங்களுடைய பாக்கி பூராவையும் 16-2-'50குள் அனுப்பவேண்டும். அப்படி அனுப்பத் தவறும் ஏஜெண்டுகளுக்குக் கட்டாயம் பத்திரிகையைத் தொடர்ந்து அனுப்ப முடியாதென்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

"மாலை மணி" பதிப்பகத்தார்.

## மேற்கு ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியில் பிளவு

லண்டன், பிப். 9—

மேற்கு ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியில் பிளவு நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. கிரெம்லின் போக்கை எதிர்க்கும் கம்யூனிஸ்டுகள் டிட்டோயிஸ்டுகள் என்றும், டிராஸ்கியைட்ஸ்டுகள் என்றும் அழைக்கப்படுகின்றனர். இரண்டு மாதங்களுக்கு முன்னமேயே கிரெம்லினிடம் விஸ்வாசமில்லாதவர்களுக்குச் சீட்டுக்கொடுக்க ஆரம்பித்தும் நிலைமை இன்னும் சீர்படவில்லை.

## கிளிக்கு சொத்து!

நியூயார்க், பிப். 9—

டெட்ராய்ட் மோட்டார் தொழிற்சாலையில் வேலை செய்து வந்த ஜியார்ஜ்பிளேர் என்பவர் ரூ 190,000 பெறுமான தன் சொத்துக்களைத்தான் வளர்க்கும்கிளிக்குச் சேர வேண்டும் என்று உயில் எழுதி வைத்திருக்கிறார்.

## ஜாகர்தாபாண்டுங்கைத் தாக்க வெஸ்டர்லிங் ரகசியத் திட்டம்

### செய்தி வெளியானதால் நடவடிக்கை ஒத்திவைப்பு

இந்தோனேஷ்யத் தலைநகர் ஜாகர்தாவையும், பாண்டுங்கையும் இதர மேற்கு ஜாவா நகரங்களையும் தாக்க வெஸ்டர்லிங்கும் அவர் கூட்டாளிகளும் ரகசியத் திட்டம் போட்டிருந்தனர் என்றும், இதன்படி சென்ற வெள்ளிக்கிழமை தாக்குதல் நடைபெற்றிருக்கவேண்டும் என்றும் ஆனால் இத்திட்டம் எப்படியோ வெளியாகிவிட்டதால் நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டு விட்டதென்றும் ஜாகர்தா ராணுவ வட்டாரச் செய்தி ஒன்று கூறுகிறது.

மேற்கொண்டு நடவடிக்கையை கடைசி டச்சு துருப்புகள் இந்தோனேஷ்யாவிலிருந்து வெளியேறியபின் எடுப்பது என்று வெஸ்டர்லிங் திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

தாக்குதல் திட்டம்பற்றி வெஸ்டர்லிங் சகாக்களுக்குள்ளேயே அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது இந்த அபிப்பிராய பேதத்தின் காரணமாகத்தான், வெஸ்டர்லிங் சென்ற மாதம் பாண்டுங்கிலிருந்து வாபஸ்பெற நேர்ந்ததென்று கூறப்படுகிறது.

# மாலை மணி

சென்னை 10—2—50 வெள்ளிக்கிழமை


# உணவுப் பஞ்சம்

உணவுப் பஞ்சம், இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள மற்ற பகுதிகளைக் காட்டிலும், சென்னை மாநிலப் பகுதியை மிகவும் வாட்டி வதைத்துக் கொடுமைப்படுத்தி வருகிறது. உணவுப் பஞ்சம், சென்னை மாநிலத்தில்—அதாவது திராவிடத்தில் வாழும் மக்களைப், பிணங்களாகவும், உணவு தேடி அலைந்து திரியும் அகதிகளாகவும் மாற்றி, பட்டினிப் பட்டாளத்தின் எண்ணிக்கையை நாளுக்கு நாள் பெருக்கிக்கொண்டு வருகிறது.

நீர்வளமும், நிலவளமும் பெற்று. உணவுப் பொருளைப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அங்கிருந்தெல்லாம் பொன்னையும், மணியையும் பண்டமாற்றாகப் பெற்று, புகழ் படைத்து வாழ்ந்த திராவிடம், இன்று தன் இரு கையேந்தி அயல்நாடுகளில் அரிசிப் பிச்சைக் கேட்க வேண்டிய தாழ்ந்த நிலைக்கு வந்துவிட்டது—கொண்டுவரப்பட்டுவிட்டது. தனக்குத் தேவையான உணவைப், பெறும வழிகளிலிருந்தெல்லாம் பெற முடியாதபடி திராவிடம் அரசியல் பொருளாதாரத் துறைகளில், வடநாட்டவரால் மிகமிகத் தாழ்த்தப்பட்டுவிட்டது. அதன் விளைவாகவே, உணவுப் பஞ்சம், அளவுக்கு மீறி இங்கு தலைவிரித்தாடத் தொடங்கி விட்டது. இதை ஆட்சியாளர் உணர மறுக்கின்றனர். ஆகவேதான் அல்லல்கள் அடுக்கடுக்காக மலிந்து வருகின்றன.

சென்னை முதலமைச்சர் தோழர் பி. எஸ், குமாரசாமி ராஜா அவர்கள் தலைமையின் கீழ் உணவு ஆலோசனைக் கமிட்டி கூடி, சென்னை மாநிலத்தின் உணவு நிலைமையைப் பற்றி விவாதித்திருக்கிறது. "உணவு நெருக்கடி இதுவரையிலும் இல்லாத வகையில் மிக மோசமானதாகவும், சமாளிக்க முடியாத வகையினதாகும்" ஏற்பட்டு விட்டது என்ற கருத்தை, அந்தக் கமிட்டி மிக அவதிப்பட்டு வெளியிடுகிறது. அவதியையும், அழுகுரலையும் வெளியிட முடிகிற அளவுக்கு, ஆவன புரியும் வழிவகைகளைக் கண்டு பிடித்ததாகவோ, கண்டுபிடிக்க மார்க்கம் கிடைப்பதாகவோ தெரியவில்லை.

அரிசியும் ஏனைய உணவுப் பொருள்களும் சேர்ந்து ஆண்டு ஒன்றுக்கு சுமாராக 75 லட்சம் டன்கள், கிடைத்து வந்தனவாம். வடபகுதியில் ஏற்பட்ட புயலின் கொடுமையாலும், தென்பகுதியில் ஏற்பட்ட பயிர் நாசத்தாலும் 12,80,000 டன்கள், அந்த சராசரி விளைச்சலிலிருந்து, இவ்வாண்டு குறைந்து காணப்படுகிறது என்று அறிவிக்கப்படுகிறது. இப்பொழுது விளைச்சல் மூலம் கிடைக்கும் உணவுப் பொருள்களைவிட அதிகப்படியாகத் தேவைப்படும் உணவுப் பொருளின் அளவு 21 லட்சம் டன்கள். இந்த 21 லட்சம் டன்கள் உணவுப் பொருள் கிடைத்தால்தான், போதுமான அளவுக்கு உணவுப் பொருள்கள் பெற்றுவிட்டோம் என்ற பெயர் எடுக்காவிட்டாலும், உணவுப் பஞ்சத்தை சமாளித்தோம் என்ற பெயராவது எற்படும் என்று கருதுகிருர்கள்.

21 லட்சம் டன்கள் உணவுப் பொருள் தேவைப்படும் சென்னை மாநிலத்திற்கு மத்திய அரசாங்கம் கொடுக்க எண்ணியிருக்கும் அளவு 3 லட்சம் டன்கள்! தேவை 21 லட்சம்! மத்திய அரசாங்கம் உதவ நினைப்பது 3 லட்சம்!! உணவுப் பஞ்சம் தன் கோர வாயைப் பிளந்து மக்களை விழுங்கத் தொடங்காது, என்று எப்படிக் கூற முடியும்! நிலைமை இதுதான் என்ற அளவில் மத்திய அரசாங்கம் விட்டுவிட எண்ணினுல். நிச்சயம் பஞ்சம் தன் பெரும் பசி அடங்கும் மட்டும் மக்களைக் கொன்று குவித்துவிடும் என்பது மிகையாகாது. இப்படிப்பட்ட நெருக்கடி நிலைமை திராவிடத்தின் குரல் வளையை நெருக்கிக் கொண்டிருக்க, வெளிநாட்டு உணவுப் பொருளைத் தாங்கள் இறக்குமதி செய்யப் போவதில்லை என்ற வெட்டிப் பேச்சினை மத்திய சர்க்கார் கூறிக் கொண்டிருக்கின்றனர். இது அவர்கள் காட்டும் வீம்புக்கு அறிகுறியாகலாமே யொழிய, விவேகத்திற்கு அறிகுறியாகாது. 21 லட்சம் டன்கள் உணவில்லாமல் துணைக் கண்டத்தின் ஒரு பகுதி தவித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், வெளி நாட்டு உணவுப் பொருள் இறக்குமதி இல்லை என்று கூறிக் கொண்டிருந்தால், நிலைமை என்ன அகும்? பட்டினிப் பட்டாளம் ஏற்படாமல் தடுக்க என்ன வழி? பட்டினிப் பட்டாளத்தின் எண்ணிக்கை வளர்ந்து கொண்டே சென்ருல்—வளரவிட்டுக் கொண்டே இருந்தால் அது நெடிது நாளைக்கு வாளா இருக்கும் என்று ஆளவந்தார்கள் எண்ணுகிருர்களா? மூன்று லட்சம் டன்களே உதவி செய்ய எண்ணியுள்ளோம். மேலும் கொடுக்க முயற்சிக்கிருேம் என்ற அலட்சிய மொழிகளைக் கூறிக் கொண்டிருக்கும் மத்திய அரசாங்கத்திடத்தில், சென்னை மாநில அரசாங்கம் எப்படி நடந்து கொள்ளப் போகிறது? என்ன செய்யப் போகிறது சென்னை மாநில அரசாங்கம்? சென்னை மாநிலத்தைப் பிணக்காடாக்கிக் காணப் போகிறதா அல்லது வெளி நாடுகளிலிருந்தேனும் உணவுப் பொருளைப் பெற முயற்சித்து, நிலைமையைச் செம்மையுறச் செய்யப் போகிறதா?

இப்பொழுது 8 அவுன் சாகக் கொடுக்கப்படும் அரசி ரேஷனை, 6 அவுன்சாகக் கொடுக்க உணவுஆலோசனைக் கமிட்டியினர் ஆலோசனை செய்துள்ளனர். இதன் மூலம் 4 லட்சம் டன்கள் தேவை குறைந்து விடுகிறதாம், இதை மன நிம்மதியோடு மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று அவர்கள் நினைக்கிருர்களா? அப்படி 4 லட்சம் டன்கள் தேவையைக் குறைத்துக் கொண்டாலும், மிகுதித் தேவையைக் குறைக்க என்ன வழி?

திராவிடம் அதாவது சென்னை மாநிலம், தன் காலிலேயே நில்லாமல், தன் பிடியை வட நாட்டாரிடம் சிக்க வைத்துக் கொண்டதால்தான் இவ்வளவு நெருக்கடியும், திகைப்பும், தேம்புதலும் ஏற்படுகின்றன. திராவிடம் இன்னும் எத்துணை நாட்களுக்குத்தான் இப்படி வட நாட்டுப் பக்கம் திரும்பி வாயைப் பிளந்து கெஞ்சிக் கேட்டு நிற்குமோ? திராவிடம் வாழ்வு பெறுவது எப்பொழுதோ? திராவிடர்கள் தன்மானம் பெற்று வாழும் காலத்தில் தான்! அப்பொழுது உணவுப் பஞ்சம் போன்ற கொள்ளை நோய்கள் நிச்சயம் தலை எடுக்காது, எடுக்க முடியாது!

## அணுகுண்டு பற்றி சமரசப் பேச்சு நடத்த ரஷ்யா தயார்

லண்டன், பிப். 9—

அணுகுண்டு சம்பந்தமான சமரசப் பேச்சுவார்த்தைகள் நடத்த ரஷ்யா தயார் என்று வெளியான செய்தியிலிருந்து மேற்கொண்டு என்ன நடக்கிறது என்பதை அறிவதில் அமெரிக்க வட்டாரங்களில் ஆவல் இருந்து வருகிறது.

இந்தச் செய்தி நேசநாடுகளுக்கிடையே ஓரளவுக்குக் கவலையை கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. ஏனெனில் இம்மாதிரி பரஸ்பர விஷயங்களில் அமெரிக்கா மட்டுமின்றி தன் பிரதிநிதிகளும் கூட்டு பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டும் என அவை விரும்புகின்றன.

இம்மாதிரி நெருக்கடியான கட்டத்தில் அமெரிக்க பொது ஜன அபிப்பிராயத்தைக் குழப்பும்படி செய்ய வேண்டும் என்பதே ரஷ்யாவின் எண்ணமாக இருக்கலாம் என்று, வாஷிங்டனிலுள்ள அரசியல் விமர்சகர்கள் கருதுகிருர்கள். ஸ்டாலின் ஏதாவது சமரசத்திற்கு வர உண்மை ஆவலுடன் இருப்பது சாத்யம் என்பதையும் மறுப்பதற்கில்லை என்று இங்கு கருதப்படுகிறது.

## அறிவுக் கதிர்!

பேசவேண்டிய காலத்தில் பேசாமலிடுப்பதால் மனிதர்கள் மறைக்கப்படலாம். பேசாமலிடுக்க வேண்டிய காலத்தில் பேசுவதால் நம்முடைய வார்த்தைகளை வீணாக்கியவர்களாவோம். புத்திசாலிகள் அவ்விரு காரியங்களைச் செய்வதில் விழிப்புடனிருக்கிருர்கள்.

—கன்பூஷியஸ்

## கண்ணுக்குப் புலப்படாத ஒளிக்கிரணம் மூலம் செய்தி அனுப்பமுடியும்

### விஞ்ஞானிகளின் புது கண்டுபிடிப்பு!

நியூபார்க், பிப். 9—

ஒருவர் பேசிய வார்த்தைகளை, கண்ணுக்குப் புலப்படாத ஒளிக் கிரணம் மூலம் சேர்த்து மற்றெரு இடத்தில் கேட்கும்படி செய்ய முடியும் என்பதை, அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர்.

இந்தச் செய்தி அனுப்புதலுக்கு டிரான்ஸ்மிட்டரும் ரிஸிவரும் மிகவும் அவசியமானவை. இதன் மூலம் ஒரு கப்பலிலிருந்து மற்றெரு கப்பலுக்கும், ஒரு விமானத்திலிருந்து மற்றெரு விமானத்திற்கும் எதிரிகள் தலையீடு செய்து இடைஞ்சல் விளைவிக்காதபடி செய்திகளைப் பரிமாறிக்கொள்ள முடியுமாம்.

சென்ற யுத்தத்தில் உபயோகிக்கப்பட்ட "வாக்கி—டாக்கி" முறைக்குப் பதிலாக இப்புது முறை அமுலுக்குக் கொண்டுவரப்படலாம்.

## செய்தியனுப்புவோர் கவனிக்க

"மாலை மணி"யில் பிரசுரிப்பதற்கென அனுப்பப்படும் செய்திகள் யாவும் ஆசிரியர் "மாலை மணி" என்ற முகவரிக்கே அனுப்பப்பட வேண்டும். அப்படியின்றி 'மானேஜர்' என்றே வேறு பெயர் களிட்டோ முகவரி எழுதி அனுப்பப்படும் செய்திகள் தவறிவிட்டுப்போக நேரிடும் என்பதை யறியவும்.

(ஆ—ர்)

## இனியும் ஈருடல் . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

படையாகச் சொல்லுகிருர். இப்படிச் சொல்வதைத் தனக்கொரு பெருமையாகவே கொள்கிறார் அவர். என்னே விந்தை!

இங்ஙனம் வெள்ளையருக்குத் துதிபாடி ஆகஸ்ட் தியாகிகள் முகத்தில் கரியைப் பூசிய தோழர் கிருஷ்ணமேனன் தனது பேச்சின் இறுதியில், இந்தியாகுடியரசானபெருமையெல்லாம் எங்கள் முதலமைச்சர் நேருவையே சாரும் என்றும் பேசியிருக்கிருர்!

இந்நிலையில இந்தியா இன்று அடைந்திருக்கும் சுதந்திரம் உண்மையான சுதந்திரந்தானு, இத்தகைய சுதந்திரத்தால் இந்நாட்டு மக்கள் நலம் பெற முடியுமா என்பன போன்ற விஷயங்களை, நாட்டு நல்லறிவாளர்களின் சிந்தனைக்கே விட்டு விடுகிருேம்.

## மார்ஷல் திட்ட உதவி மூலம் பெற்றப் பயன்

மார்ஷல் திட்ட உதவிமூலம் ஐரோப்பிய நாடுகள் பெற்ற தொகையில் பெரும்பாலும் பருத்தி வாங்கவே செலவிடப்பட்டிருக்கிறது என்று மார்ஷல் திட்ட நிர்வாகக் காரியாலயம் அறிவித்திருக்கிறது.

பருத்திக்காக 575900,000 டாலர்களும், இயந்திரங்களுக்காக 498000000 டாலர்களும், பெட்ரோலுக்காக 420,000,000 டாலர்களும் செலவிடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## போர்மோஸாவில் நிதி திரட்ட சியாங் கும்பல் முயற்சி!

லண்டன், பிப். 9—

போர்மோஸாவில் தனிப்பட்ட ஜப்பானியர்களுக்குச் சொந்தமான வீடுகளை விற்று நிதி திரட்டுவதில் சீன தேசிய சர்க்கார் அதிகாரிகள் முனைந்திருக்கின்றனர். அவ்வீடுகளில் குடியிருப்பவர்கள் ஒன்று வீட்டை வாங்க வேண்டும் அல்லது வாங்குபவர்களுக்கு வீட்டைக் காலி செய்து கொடுத்துவிட வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுகிருர்கள்.

## ஜோர்டனில் கடும் பனிப் புயல்

அம்மான், பிப். 9—

இதுவரை எப்பொழுதுமே இல்லாதபடி கடுமையான பனிப் புயல் அடித்ததின்விளைவாக டெலிபோன் இணைப்பு ஒன்றைத் தவிர மற்ற போக்குவரத்துச் சாதனங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டு விட்டன.

தண்ணீர்க் குழாய்கள் முதலில் உறைந்த பின்னர் வெடித்துவிட்டன.

## கொடுமைக்குள்ளாகும் சிறுவர்களின் பாதுகாவலருக்குத் தண்டனை!

—(0)—

### பிரெஞ்சு மந்திரியிடம் குழந்தைகள் கூட்டம் முறையீடு

பாரிஸ், பிப். 9—

கொடுமைப்படுத்தப்படும் குழந்தைகளை வெளியேற்றி, அநாதை ஆஸ்ரமத்தில் சேர்க்கும் சேவையைச் செய்துவந்த அலெக்ஸிஸ்டீனன் என்கிற பத்திரிகாசிரியர் தண்டிக்கப்பட்டதை எதிர்க்கவும், நீதி மந்திரியைக் கண்டு முறையிடவும் நூற்றுக்கணக்கான பாலர்கள்கொண்ட கூட்டம் பாரிஸ் தெருக்களில் வலமாகச் சென்றனர்.

சென்ற ஆண்டு லாஸ் என்ற இடத்தில் ஒரு கிழவி தன்னிடம் வளரும் இரு அநாதைப் பெண்பிள்ளைகளை கொடுமையாக நடத்திய தகவல் கேட்டு அலெக்ஸிஸ் அவர்களை விடுவித்து அநாதை ஆஸ்ரமத்தில் சேர்த்தார். இதன்பேரில் அக்கிழவி அலெக்ஸிஸ் மீது வழக்கு தொடர்ந்து அந்த இரு பிள்ளைகளையும் தன் பொறுப்பிலேயே விட்டுவைக்க வேண்டும் என்று மனுச் செய்துகொண்டாள் 28 சாட்சிகள் அக்கிழவி குழந்தைகளைக் கொடுமைப்படுத்தியது உண்மைதான் என்று சாட்சியளித்த பின்பும் நீதிபதி அக்கிழவியிடமே குழந்தைகளை ஒப்படைக்கவேண்டும் என்று தீர்ப்பளித்தார். இதை அலெக்ஸிஸ் எதிர்க்கவே கோர்ட்டை அவமதித்த குற்றத்திற்காக அவருக்கு ரூ. 350 அபராதமும் 15 நாள் சிறைத் தண்டனையும் அளிக்கப்பட்டது.

# மதுரை மாவட்டத்தில் பொதுச் செயலாளர்

—————(0)—————

# பொது மக்களிடையே பொங்கிய ஆர்வமும் வரவேற்பும்!

(நமது தனி நிருபர்)

மதுரை, பிப். 8—

இன்று காலை திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் வண்டியில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணாத்துரை, தோழர் என். வி. நடராசன் ஆகியோர் மதுரை வந்தடைந்தனர்.

மதுரைக்கு அண்ணாத்துரை வரும் விவரம் கடந்த ஒருவார காலமாக விளம்பரம் செய்யப்பட்டு வந்தது. ஆங்காங்கே இயக்கக் கிளைக்கழகங்கள் தனித்தனியே போர்டுகள் மூலம் அண்ணாத்துரை வருகையை அறிவித்திருந்தன.

குறிப்பிட்ட தினமாகிய இன்று காலை 6 மணிக்கு ஸ்டேஷன் வந்து மக்கள் கூடியவண்ணமிருந்தனர்.

ஏராளமான மக்கள் கையில் மலர் மாலையுடனும், கொடிகளுடனும் எதிர்பார்த்திருந்தனர்.

கடைசியாக 7-45 மணிக்கு வண்டியும் வந்தது. கூட்டம் சமாளிக்க முடியாத அளவு பெருகி விட்டது. கடந்த 5 ஆண்டுகளுக்குப் பின் அண்ணாத்துரை மதுரை வருவது இதுதான் முதல் தடவையாதலால், அவரைக் காணவேண்டுமென்றிருந்த மக்களுக்கு இது ஒரு வாய்ப்பு என்றுதான் சொல்லவேண்டும்.

## வரவேற்பு

இயக்க கொடியின் 'பாட்ஜ்' அணிந்த சுமார் 500 தொண்டர்கள் அணிவகுத்து நின்று, தலைவர்கள் பொதுமக்களைக் கட்டுப்படுத்த, வண்டி ஸ்டேஷனில் வந்து நின்றது உடனே பெரும் வாழ்த்தொலிகள் முழங்க, பொதுச்செயலாளர் வண்டியைவிட்டு கீழே இறங்கியவுடன், திராவிட முன்னேற்றக் கழகம்—மதுரைக் கிளையின் சார்பாக தோழர்கள் எஸ். முத்து, தா. ஆவுடையப்பன், எம். அய்பாச்சாமி, கே. எஸ். இராசமான் மற்றும் பல இயக்கத் தோழர்கள் முதலில் மாலையிட்டனர். தொண்டர்கள் மிகவும் கஷ்டப்பட்டு தோழர் அண்ணாத்துரையை வெளியே கொண்டுவந்தனர். பொதுச்செயலாளரின் வருகையை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்த ''காமிரா''க்காரர்கள் ''கிரீச்'' ''கிரீச்'' சென்று நூற்றுக்கணக்கான போட்டோக்களை எடுத்தனர்.

## கைகூப்பி வணக்கம்

தோழர் அண்ணாத்துரை அவர்கள் ஸ்டேஷனுக்கு வெளியே கூடியிருந்த பத்தாயிரக்கணக்கான மக்களைக் கண்டவுடன், கைகூப்பி வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

சமாளிக்கமுடியாத கூட்டம் கூடிவிட்டது. தோழர் அண்ணாத்துரையைக் காண்பதற்கு பலர் துடிதுடித்துக் கொண்டு முனைந்து முன்வந்தனர்.

எதிர்க்கட்சிக்காரர்களும் கண்டு அன்பு காட்டுமாறு ஒழுக்கத்துடனும், கட்டுப்பாட்டுடனும் தொண்டர்கள் நடந்துகொண்டது மிகவும் வியப்பிற்குறியதாக இருந்தது. கூடியிருந்த கூட்டத்தினரைக் கண்டு பொதுமக்கள் மிகவும் ஆச்சரியமடைந்தனர்.

இக்காட்சியைக் கண்ணுற்றபோது, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் கூறியது போன்று ''கிளம்பிற்றுகாண் தமிழர் சிங்கக் கூட்டம்'' என்பதுபோன்றிருந்தது. பின்னர் தலைவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரில் மதுரை 'டிராவலர்ஸ்பங்களா'விற்குச் சென்றனர்.

## நண்பர்களோடு...

அங்கு குளித்துவிட்டு நகரத்தின் பல முக்கியத் தோழர்களுக்கு தோழர் அண்ணாத்துரையும்தோழர் நடராசனும் பேட்டியளித்துவிட்டு காலை சிற்றுண்டி அருந்தினர், மாணவர்கள் ஏராளமாக தங்கள் புத்தகங்களில் கையெழுத்து பெற்றுக்கொண்டு சென்றனர்.

## வேலாயுதம் நினைவுப் படிப்பகத்தில்......!

பின்னர் காலை 9-30மணிக்கு அழகரடி மில்கேட்டிற்கு முன்பாக அமைக்கப்பட்ட அழகிய பந்தலின் முன்பாக ஆசிரியர் வேலாயுதம் நினைவுப் படிப்பகத்தில் பொதுச் செயலாளர் கழகக் கொடியை ஏற்றி வைத்து கருத்துமிக்க ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினர். (பேச்சு பின்னர் வரும்)

கூட்டத்திற்குத்தோழர் என் வி. நடராசன் தலைமை வகித்தார். வேலாயுதம் நினைவுப் படிப்பகத்தார் அண்ணாத்துரைக்கு மாலையிட்டு, ஓர் வரவேற்பு இதழ் வாசித்தளித்தார்கள்.

மற்றும் அழகரடிப் பகுதியில் மற்றொரு கொடியுமேற்றி வைக்கப்பட்டது.

எங்கு பார்த்தாலும் இதைப் பற்றியே பேச்சாக இருந்தது. இத்துடன் பொதுச் செயலாளர் தனது குழுவினருடன் காரில் தனது மதுரை மாவட்டப் பிரசாரத்தைத் தொடங்கினர்.

## சமயநல்லூர்

அடுத்தபடியாக சமயநல்லூர் பொது மக்கள் சார்பாக மந்தை வெளியில் ஓர் பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. சமயநல்லூர் செல்லும் வழியில் செல்லூரில் அங்குள்ளமக்கள் அண்ணாத்துரையைச் சந்தித்து தங்கள் அன்பைத் தெரிவித்துக் கொண்டனர்.

## பொதுக்கூட்டம்

பின்னர் சமயநல்லூர் பொதுக்கூட்டத்தில் தோழர் அண்ணாத்துரை சுமார் 1-மணி நேரம் கூடியிருந்த விவசாயிகளிடையே பண்டைய திராவிடத்தின் மேம்பாட்டை விளக்கி ஓர் அரிய சொற்பொழிவாற்றினர். (பேச்சு பின்னர் வரும்)

கூட்டத்திற்கு தோழர் என். வி. நடராசன் தலைமை வகித்தார். தலைவர்களுக்கு மாணவர் கழகம், சமயநல்லூர் பொதுமக்கள், தோடனேரி மாணவர்கள், மற்றும் பல சங்கத்தின் பேரால் மாலைகளும், வரவேற்பு இதழ்களும் வாசித்தளிக்கப்பட்டன.

சமயநல்லூர் வாசிகளால் ஓர் இனிய சிற்றுண்டி வழங்கப்பட்டது.

## தேனூர்

பின்னர் சமயநல்லூருக்கு அடுத்துள்ள தேனூருக்கு வந்தடைந்தனர். மதுரையிலிருந்து சைக்கிளில்மாணவர்கள் பலர் காரை பின்தொடர்ந்து வர, சரியாக 11-45 மணிக்குத் தேனூரில் கூட்டம் ஆரம்பமாகியது. கூடியிருந்த மக்கள் அனைவரும் அன்போடு வரவேற்று எல்லோருக்கும் ''இளநீர்'' வழங்கினர். பின்னர் அண்ணாத்துரை,என்.வி. நடராசன் ஆகியோர் எதிர்க்கட்சிக்காரர்களின் பொய் பிரச்சாரத்திற்கு தகுந்த பதிலளித்து, உண்மையிலேயே கடவுள், மதம் ஆகியவற்றின் எதிரிகள் தாங்கள் அல்லவென்றும், ஆண்டவன் பெயரால் வீணாக செலவு செய்யப்படும் பணத்தை மீதப்படுத்தி, அதைக் கல்விக்காகச் செலவிடவேண்டுமென்றும் கூறினார்கள்.

கூட்டத்திற்கு ஏராளமான தாய்மார்கள் வந்திருந்தனர். இந்தக் கிராமத்தின் நடு மத்தியில் மிகப் பெரியதோர் மரத்தில் லட்சியக் கொடியாக திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை, இடி முழக்கமென வாழ்த்தொலிகளுக்கிடையே ஏற்றிவைத்தார். அத்துடன் 2-30 மணிக்கு சோழவந்தான் வந்தடைந்தனர். வந்திருந்த அனைவருக்கும் சோழவந்தான் ''டனகால் விலஸில்'' பகல் உணவு அளிக்கப்பட்டது.

## பொன்னம்பலனார்

தோழர் அண்ணாத்துரையின் சுற்றுப் பயணத்தை கேள்விப்பட்ட அவரின் பழைய நண்பர் தோழர் அ. பொன்னம்பலனார் சிறிது நேரம் அண்ணாத்துரையுடன் அளாவளாவிக் கொண்டிருந்தார். (ந-நி)

---

# மேற்கு ஜெர்மனியில் வேலையில்லாத் திண்டாட்டம்!

லண்டன், பிப். 8—

மேற்கு ஜெர்மனியில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருவது அதிகாரிகளுக்கு மிகவும் கவலையளித்து வருகிறது.

1949—ல் வேலையில்லாதோர் எண்ணிக்கை இரட்டிப்பாகி விட்டது. இப்பொழுது 12,50,000 பேர்களுக்கு மேல் இப்போது வேலை இல்லாமல் இருக்கிறார்கள்.

இவ்வளவுக்கும் ரூர் தொழிற்சாலைகளில் எவ்வளவு பேர் முடியுமோ, அவ்வளவு பேர்களும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

———

லண்டன், பிப் 8—

இருபது எண்ணெய்க்கப்பல்களை கட்ட பிரிட்டன் ஸ்காட்டிஷ் கம்பெனி ஒன்றுக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறது என்று தெரிகிறது.

---

# தென்னாற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்

கடலூர், பிப். 7—

5—2—50 ஞாயிறு அன்று மாலை 4-15 மணிக்கு செயற்குழுக் கூட்டம் தோழர் எம். கல்யாணசுந்தரம் அவர்கள் தலைமையில் கடலூர் டி. ஹில்டன் சோன் மாடியில் நிகழ்ந்தது. பல வட்டங்களிலிருந்து ஏராளமான தோழர்கள் வந்திருந்தனர். வரவேற்புக்குழு அமைக்கப்பட்டு பல தோழர்கள் கழகம் குறித்து பேசினர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின. அதுபோது, பிப்ரவரி 26-ல் தெ. மா. ஆ. தி. மு. க. முதல் மாநாட்டைக் குறிஞ்சிப்பாடியில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

வரவேற்புக்குழு அடியில் கண்டவாறு:—தலைவர்:—இரா. சபாபதி, குறிஞ்சிப்பாடி. செயலாளர்கள்:-குறிஞ்சிப்பாடி, கு. த. ம. பழனியப்பன் பண்ருட்டி. இரா பழனிசாமி, குறிஞ்சிப்பாடி கு. தோ. குழந்தைவேலன். பொருளாளர்:—குறிஞ்சிப்பாடி. அ. ம. வைத்திலிங்கம். தொண்டர் படைத்தலைவர்: குறிஞ்சிப்பாடி, தோழர் கொ. தங்கராசு. விளம்பர அதிகாரி குறிஞ்சிப்பாடி வட்டாமி.

குழு உறுப்பினர்கள்:- குறிஞ்சிப்பாடி டாக்டர் அர்ச்சுனன், சேர்மன் முத்தையா, சரவணன், கிருஷ்ணசாமி குள்ளஞ்சாவடி; என். இராசன், கடலூர் ஓ. டி. கெ. அ. இளங்கோ, கோ. சுவாமிநாதன், கு. சண்டபாணி நெல்லிக்குப்பம், என். இராசகோபால், சி. இளவழகன், மண்ணுநட்டி ச. குமாரசாமி, (குறிஞ்சிப்பாடிக்கடுத்த) கண்ணுடி. கோவிந்தசாமி, சப்பையன், விருத்தாசலம் தாலுகா:—சாத்தமங்கலம். இராசமாணிக்கம், இட்டக்குடி இரங்கசாமி, அலக்னேயுக், கள்ளக்குறிச்சி, வடக்காந்தல், கீழையத்தான், சோமாண்டார்குடி, அமானசைபா, திருக்கோவிலூர்:—அரகண்டநல்லூர், ஒய். பழனி, ஆறுமுகம். திண்டிவனம்:—எ. தங்கவேலு, சி. பாண்டுரங்கன், செஞ்சி மேலச்சேரி, வே. கோபால், விழுப்புரம் முத்துராமன், வளவனூர் முத்தப்பெருமாள். சிந்தாமணி ராமராசன், கலியபுரம் இராமபழனிசாமி, சிதம்பரம் பாலகுருஅ.நகர்,கோவிந்தசாமி, வெள்ளியங்குடி முருகேசன் புதுவை ச. மன்னர் மன்னன், வை. கணேசன் ச. சிவப்பிரகாசம்.

மாநாட்டுக்கு ''திருவள்ளுவர்பந்தல்'' என பெயரிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

மாநாட்டு அனுமதிச் சீட்டுகள். கன்கோடையாளர்கள்.

| | | |
|---|---|---|
| வரவேற்பாளர் | 5—0—0 | } உணவுடன். |
| பார்வையாளர் | 2—0—0 | |
| பார்வையாளர் | 0—8—0 | } உணவின்றி. |
| சார்பாளர் | 1—0—0 | |

பெண்கள்.

பார்வையாளர் 0—4—0

சார்பாளர் 1-4-0உணவுடன்.

இன்னும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கடைசியாக வைத்தியவள்ளல் வே. கிருஷ்ணசாமி அவர்கள் மறைவிற்கு, அன்னார் குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேறியது. (நி-உ)

---

# தி. மு. க. பொதுக்கூட்டம்

———

## எட்டயபுரம்

எட்டயபுரம், ஜன. 30-

இவ்வூர் தி. மு. கழக சார்பில் 14-1-50-ல் சுடுவிற்பட்டி ரோட் தாணியம்மன் கோவில் மைதானத்தில் பொங்கல்விழா பொதுக்கூட்டம் நடந்தது. கூட்டத்திற்குத் தோழர் இராமசாமி தலைமை தாங்கினர். தோழர் மேக. முத்து பேசுகையில், 'இன்று நாட்டில் பல விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. ஆனால் அவைகளிலுள்ள பகுத்தறிவு பழம் பிறந்த என்றாராய இதுக்கிமேதவிர வேறு பயன் இராது.'' பொங்கல் விழா அப்படியல்ல, உழவர்களின் திருநாள் எனக் குறிப்பிட்டார். அடுத்துப் பேசிய தி. மு. க. செயலாளர் தோழர் மு. வெற்றிவேல் கூறியதாவது:-உலகில் பல விழாக்கள் நடந்தன. நடந்தும் வருகின்றன ரஷ்யாவில் நவம்பர் புரட்சி விழாவும், உலகெலாம் மேதின விழாவும் நடைபெறும் இந்நாளில் இங்குமட்டும், கார்த்திகைத் தீபம், மார்கழி திருவாதிரை, ஏகாதேசி என அறிவுக்கும், உழைப்புக்கும் மதிப்புத்தராத மதமென்ற மாசு படிந்த, ஆபாசக் கருத்துடைய விழாக்களில் நாட்டாரும் மக்களும் கலந்துகொள்ளும் விசித்திரத்தைக் காண்கிறோம். பொங்கல் விழா கொண்டாடவேண்டிய அவசியம் பற்றியும் பேசினர். தோழர் கலிங்கன் பேசியதாவது:-கண்ணிலா ரோயுடையார் எழுந்து நடக்க வகையிலா கண்ணில்லாத குருடரைப்போல் பிறர் காட்டிய வழியில் சென்று மாட்டிக்கொண்டதால் தான், நடக்க சக்தியற்ற படாதவர்கள் 'பொங்கல் விழா'வைப் பகுத்தறிவுப்பணிபுரியும் தி. மு. கழகத்தாரைத் தவிர மற்றவர்கள் கொண்டாட வில்லை என்றார், ''ரசவாளர் நிலை'' 'பொங்கலன்று மாட்டாளி இல்லத்தில் பால் பொங்காததற்குக் காரணம்'' பற்றியும்பேசினர். கடைசியாக விருதுநகர் தோழர் எம். இளஞ்செழியன் பேசியதாவது:-

மெஜாரிட்டியாகிய நாம் மைனாரிட்டிப் பார்ப்பனரை கேட்டோம், நியாயமாக செட்டியார் வீட்டை எலிக்கோட்டை, தாலமுத்து, நடராசன் மக்களின் தாலியைத் தந்து கேட்டோம். கிடைக்கவில்லை அதன் பிறகுதான் தனி நாடு அவசியம் என்ற நிலைக்கு வந்தோம் என்றும், சேலத்தில் அண்ணா அவர்களால் இயக்கத்தில் பெரிய மாறுதல் ஏற்பட்டது என்றும், தமிழர் களாகிய நாம் எப்பொழுதுமே வீரர்கள் என்றும், சரித்திரச் சான்றுகள் காட்டி, காட்டிக் கொடுக்கும் பண்பு ஆரியக் கலைச் சாரம்தான் என்றும், மற்றும் தற்கால நிலை பற்றியும் சுமார் 2 மணி நேரம் இனிய எழுச்சிதரும் நடையில் பேசினர். செயலாளர் நன்றி கூற விழா முடிவுற்றது

# தி. மு. கழகக் கூட்டங்கள்

**11-2-50**

சென்னை மௌண்ட்ரோடு:— க. அன்பழகன் சி.பி. சிற்றரசு, சத்தியவாணி முத்து.

சென்னை, சைதாப்பேட்டை:— சி. பி சிற்றரசு, மா. இளஞ்செழியன், அலர்மேலுஅப்பாதுரை, கா. அப்பாத்துரை, புலவர் ஆறுமுகம், காஞ்சி. கல்யாணசுந்தரம்.

(மதுரை மாவட்டம்) போடி (காலை) பெரியகுளம் (மாலை) — சி. என். அண்ணாத்துரை. ... நடராசன்,

திட்டகுடி:— ... நெடுஞ்செழியன்.

**12—2—50**

வேலூர்:— க. அன்பழகன்.

மேலக்கற்கண்டார்கோட்டை:— சி. பி. சிற்றரசு, ஜி. டாராங்குசம். சு. காளிமுத்து.

விருதுநகர்:— டி. கே. சீனிவாசன், கே. ஏ. மதியழகன்.

(மதுரை மாவட்டம்) மேலூர் மதுரை — சி. என். அண்ணாத்துரை, என். வி. நடராசன்,

**13-2-50**

சோழவந்தான் (மதுரை):— சி. என் அண்ணாத்துரை என். வி. நடராசன்.

## சென்னை மாவட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

12-2-50 ஞாயிறு மாலை 3-மணிக்கு மண்ணடி "மாலை மணி" அலுவலகத்தில், டிை கூட்டம் நடைபெறும். அண்மையில் நடைபெற்ற மாநாட்டின் வரவு செலவுக் கணக்குகள் ஒப்படைக்க வேண்டியிருப்பதால், மாவட்டக் குழுவின் நிர்வாக உறுப்பினர்கள் தவறாது வந்து கலந்துகொள்ள விழைகின்றேன்.

கே கோவிந்தசாமி
செயலாளர்

## சென்னை ஒற்றைவாடையில்

**டி. கே. எஸ். சகோதரர்கள் கடைசியாக அரங்கேற்றும் புதிய நாடகம்!**

தமிழன் எண்ணியெண்ணிப் பூரிப்படையும் பெருமைமிக்க வரலாறு

முதல் முதலாக சுதந்திர முழக்கம் செய்து ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஆண்மைக்காய்ப் போரிட்டுத் தூக்குமேடை ஏறினன்

**வீரபாண்டியக் கட்டபொம்மன்**

அவனது மகத்தான சரித்திரம் இந்திய விடுதலைப்போரில் உயிர் நீத்த ஆயிரக்கணக்கான தியாகிகளின் அழியாத ஞாபகச் சின்னம்

**கட்டபொம்மனின்**

# முதல் முழக்கம்

(திரு. ரா. வேங்கடாசலம் எழுதியது)

**10—2—50 வெள்ளி முதல் தினசரி**

தமிழரசுக் கழகத் தலைவர் திரு. மா. பொ. சிவஞானம் அவர்கள் தலைமைவகிப்பார்கள்

28—2—50 கடைசி நாடகம்

## வெள்ளி விழா

வாணியம்பாடி இஸ்லாமியா ஐஸ்கூல் தலைமை ஆசிரியர் ஜனாப். K. அப்துல்கொத்தூஸ் சாயபு B. A., L. T. அவர்களின் வெள்ளி விழா 12—2—50 ஞாயிற்றுக்கிழமை மாலை கல்வி மந்திரி கனம் K. மாதவமேனன் அவர்கள் தலைமையில் நடைபெறும்

டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, இரா. நெடுஞ்செழியன் அவர்களும் சொற்பொழிவாற்றுவார்கள்

தலைமை ஆசிரியருக்கு ரூபாய் 5,000 கொண்ட பண முடிப்பு பழைய மாணவர்கள், பெற்றோர்கள், அனுதாபிகள் சார்பாக அளிக்க முடிவுசெய்துள்ளதால் வாக்களித்துள்ளவர்களும், விரும்புபவர்களும் கீழ்க்கண்ட முகவரிக்கு நன்கொடைகளை அனுப்ப வேண்டப்படுகிறார்கள். வே. ச. விசுவநாதம், தலைவர்.

வெள்ளி விழாக் கமிட்டி, வாணியம்பாடி.

# தி. மு. கழகக் கிளைகள்

### அய்யூர்—சிற்றூர்க் கிளை

அய்யூர், ஜன. 20—

14-1-50 அன்று ஏ. எஸ். சின்ன பிள்ளை அவர்கள் தலைமையில் தி. மு. க. அமைப்புக் கூட்டம் நடைபெற்றது.

அதுபோது, "தி. மு. கழகம்-உடையார்பாளையம் வட்டம் அய்யூர் நகரக்கிளை" திறவப்பட்டு, பின்னர் கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:- மு. பெருமாள்; துணைச்செயலாளர்:-க. கோவிந்தசாமி; பொருளாளர்:-ஏ. சி. ஏகாம்பரம்; விளம்பர உறுப்பினர்:-ஏ. வி. கோவிந்தசாமி; ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:-என். இராமானுசம், கே. சோமசுந்தரம், பி. ஒருசாமி, சி. காசிநாதன், என். கோதண்டம், டி. ராதாகிருட்டினன், கே. கே. கோவிந்தன், சி. மகாதேவன், ஆர். கலியபெருமாள், எம். இராமசாமி. பின்பு ஏ. வி. கோவிந்தசாமி நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது.

* * *

### ஒ. கொண்டலாம்பட்டி—சிற்றூர்க்கிளை

ஒ. கொ. பட்டி, ஜன. 25—

சேலம் ஜில்லா, ஒ. கொண்டலாம்பட்டியில் தி. மு. க. அமைப்புக் கூட்டம், தோழர் கே. எஸ். அமிர்தம் அவர்கள் இல்லத்தில், தோழர் ஆர். கே. கோவிந்தராசன் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தேறியது.

அதுபோது "தி. மு. கழகம் கொண்டலாம்பட்டி சிற்றூர்க்கிளை திறவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழுவினர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்:—கே. எம். கோவிந்தராசன்; துணைச் செயலாளர்:—கே. எஸ். அமிர்தம்; பொருள் உறுப்பினர்-எஸ். பழனிச்சாமி; வி.உ:—கே. ஆர். வரதராசன். ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்-பெ அ. ரங்கசாமி, ஜி. கோபால், மு. ராமன், ர. குப்பண்ணன், ஜி கே. மூர்த்தி, கே. எஸ். ராமச்சந்திரன், ஏ. ஜெயராமன், எம். கந்தசாமி, ப. வரதராசன், டி. பி. கே. பழனிச்சாமி, கே. பழனிசாமி, பி நடேசன், எ. சவுண்டப்பன். பின் செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

### தென்காசி—நகரக் கிளை

தென்காசி, பிப். 5—

3-2-50 அன்று இரவு 8 மணிக்கு தென்காசி மலையாநதெரு, தோழர் சப்பாணிமுத்து அவர்கள் இல்லத்தில், திராவிட முன்னேற்றக் கழக அமைப்பு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தோழர் செய்யது சுலைமான் அவர்கள் தலைமை வகித்தார். அதுபோது "தி. மு. கழகம்—தென்காசி நகரக் கிளை" திறவப்பட்டது.

தோழர்கள் சுந்தரம், கடையநல்லூர் தோழர் ஆ. திராவிட மணி இருவரும் உறுப்பினர்களின் கடமையைப் பற்றியும், இயக்கக்கொள்கைகள் குறித்தும் சொற்பொழிவாற்றினார்கள்.

பின் சுளக்கிளை ஒன்று அமைக்க ஏகமனதாக முடிவு செய்யப்பட்டு, கீழ்க்கண்ட முறையில் செயற்குழுவும் திறவப்பட்டது.

செயலாளர்:—முகம்மது குர, துணைச்செயலாளர்:—சுந்தரம், நிதி உறுப்பினர்:—அ. திருமலை, விளம்பர உறுப்பினர்,—பே. ஆர் சுப்பையா. ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—தோழர்கள் முகம்மது சுக்தூர், மைதீன் அகம்மதுசா, வீ. சுப்பையா, முகம்மது காசிம், எம். சண்முகம், தி. ஐயம்பெருமாள், தி. ஆறுமுகம், எம். சருப்பசாமி, பி. எம். செல்லையா. பிறகு தோழர் கே. ஆர். சுப்பையா நன்றி நவில அடன் கூட்டம் இனிது முடிந்தது.

* * *

### சென்னை நகர புரசை (புது மார்க்கட்)—உட்கிளை

சென்னை, பிப். 8—

17-1-50 அன்று மாலை திராவிட இயக்க ஆதரவாளர்கள் அனைவரும் தோழர் சா. ம. சுந்தரம் அவர்கள் இல்லத்தில் கூடி "தி. மு. கழகம் சென்னை நகர புரசை புது மார்க்கட்டு) உட்கிளை" திறவினர். பிறகு கீழ்க்கண்ட செயலுறுப்பினர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:—சா. ம. சுந்தரம், பொருளாளர்:—ஏ. பி. கண்ணப்பன்; விளம்பர உறுப்பினர்:-ஆ. ஆனந்தன். ஏனைய செயற்குழுவினர்:-த. செயராமன், பி. மு. கருணாநிதி அ. வெ. தனலிங்கம், மு. பாலன், பி. அப்பாசாமி, பெ. ஜெகந்நாதன். பிறகு செயலாளர் நன்றிநவில கூட்டம் முடிந்தது.

## இனி நடப்பவை

சென்னை—மௌண்ட்ரோட்டைச் சேர்ந்த எல்லிஸ்ரோடு அருகிலுள்ள பங்காரு நாயக்கன் தெருவில் 11-2-50 சனி மாலை 5 மணிக்கு தி. மு. கழகத் துவக்க விழாச் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் சி. பி. சிற்றரசு, தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

வேலூர்—கலாச அசித்திக்காரத் தெரு தி. மு. கழகக் கட்டிடத்தில் 12-2-50-ல் "திருவள்ளுவ சொற்பயிற்சி" நடைபெறும். அனைத்தினரவரும் அழைக்கப்படுகிறார்கள்.

* * *

விருதுநகர்—இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் 12-2-50 அன்று செல்வம் திடலில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனிவாசன், கே. ஏ. மதியழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

மேலக்கற்கண்டார்கோட்டை—இவ்வூர் தி. மு. கழகத் துவக்க விழா, 12-1-50 ஞாயிறு மாலை 6-மணிக்கு தோழர் எஸ். சாமி மூர்த்து தலைமையில் நடைபெறும். தோழர்கள் ம. கே. சீனிவாசன், ஜி. ராசங்குசம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

விருதுநகர்—இவ்வூர் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழா, 12-2-50-ல் நடைபெறும். தோழர்கள் கே. ஏ. மதியழகன் பி. ஏ; டி. கே. சீனிவாசன் பேசுவர்.

* * *

மதுரை—தெற்கு வாசல் சாலமுத்து நடராசன் நிலைவுப் படிப்பகத்தில் 12-2-50 ஞாயிறு காலை 10 மணிக்கு சர். பி. தியாகராயரின் படத்தை தோழர் சி. என். அண்ணாத்துரை எம். ஏ. திறந்து வைப்பார். அன்று மாலை 6-30 மணிக்கு கிருஷ்ணராயர் தெப்பக்குளத்திடலில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் சி. என். அண்ணாத்துரை, என். வி. நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

சென்னை:—மீன் பிடிப்போர் வாலிபர் சழகக் கூட்டம் 11-2-50 மாலை 5 மணிக்கு காசிபுரம் பி. பிளாக் மீன் பிடிபோர் சழகக் கட்டிடத்தில் தோழர் குப்புசாமி தலைமையில் நடைபெறும்.

* * *

வேலூர் (வ-ஆ)—இவ்வூர் தி மு. கழகச் சார்பில் 12-2-50 ஞாயிறு மாலை 6-மணிக்கு கோட்டை மைதானத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் க. அன்பழகன் எம். ஏ. மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

## வட ஆற்காடு மாவட்ட அமைப்புக் கூட்ட அழைப்பு

17-2-50 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு வேலூர் லட்சணசாமி டவுன்ஹாலில், திருவண்ணாமலை நகராண்மைக் கழகத் தலைவர் தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் தலைமையில் கூடி மாவட்டக் கழக அமைப்பும், மாவட்ட மாநாடு நடத்த வேண்டியதற்கான ஏற்பாடுகளும் செய்ய வேண்டியிருப்பதால் மாவட்ட, நகர, சிற்றூர்க் கிளைக் கழகங்கள் இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனுப்ப வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எம். நடேசன்
அமைப்பாளர்
வ. ஆ. மாவட்ட தி. மு. கழகம்

## ஆதித்திராவிடர் கல்வி முன்னேற்ற நிதி; சென்னை, செங்கற்பட்டு

சென்னை பிப் 5—

ஆதித்திராவிடர் மாணவர்களுக்குத் தற்போது அளிக்கப்பட்டுவரும் பள்ளிக்கூடச்சம்பளமில்லா சலுகை நிறுத்தப்பட்டவுடன், மேற்படி வகுப்பு மாணவர்களுக்கு ஒரு சிறிதளவாவது உதவும்பொருட்டு ஒரு நிதி தொடங்கப்பட்டது. அந் நிதியின் முதல் கூட்டம் 22—1—50 அன்று வில்லிவாக்கத்தில் நடைபெற்றது.

நடைமுறை ஆண்டிற்குத் தோழர் ஐ. ஏழுமலைதலைவராகவும், தோழர் மு. சா. ஞானப்பிரகாசம் செயலாளராகவும், தோழர் வி. பி துரைசாமி. பொருள் காப்பாளராகவும், தோழர்கள் வே. கன்னையா, ந. ரெங்கசாமி, கெ. ராஜகோபால் சி. முத்துலிங்கம் முதலியோர், செயற் குழு அங்கத்தினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## மாணவர் மன்றத் தமிழ்த் தேர்வு

சென்னை மாணவர் மன்றச் சார்பில் வழக்கம்போல் வடவேங்கடம் முதல் தென்குமரி ஈறுக நடக்கும் ஈ. எஸ். எல் சி; எஸ். எஸ். எல் சி. இண்டர் மீடியட் ஆகிய வகுப்புத் தேர்வுகள் இவ்வாண்டு 11—2—50 சனிக்கிழமை காலை 10 மணிக்கு சென்னையிலும், பிற இடங்களிலும் நடைபெறும்.

## பச்சை குத்திக் - கொள்வதின் விளைவு

**பெருநோய் பிடிக்கும்!**

லண்டன், பிப். 9—

யுனைடெட் ஸ்டேட்ஸ் கடற்படையைச் சேர்ந்த இருவருக்கு மேல் போனில் 1943-ல் பச்சை குத்திக்கொண்டதின் விளைவாக, குஷ்டவியாதி ஏற்பட்டிருக்கிறதென்று குஷ்ட வைத்திய விஷயமான சர்வதேச சஞ்சிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

இதனுல் பச்சை குத்திக்கொள்வதினுல் குஷ்ட வியாதி வருவதாக அர்த்தமில்லை என்றும், சென்ற நூற்றாண்டில் குஷ்ட வியாதி தொத்து வியாதிதானு என்பதைப் பற்றி அபிப்பிராய பேதம் இருந்து வந்ததென்றும், இப்பொழுது ஒருவரே இருவருக்கும் பச்சை குத்தியதால் குஷ்டரோகம் வந்ததால் தொத்து வியாதி என நிரூபிக்கப் பட்டுவிட்டது என்றும் அப்பத்திரிகை எழுதியிருக்கிறது.

## தோழர் மு. கருணாநிதி

தோழர் மு. கருணாநிதி அவர்கட்கு உடம்பினில் பேச இயலாதபடி விலாவில் வலி ஏற்பட்டு தொந்திரவு ஏற்படுகிறபடியால் இரண்டு மாத காலத்துக்குப் பூரண ஓய்வு பெற்றுக்கொள்ள வேண்டியதற்காகக் கூட்டங்களில் கலந்து கொள்ள இயலாது என்பதையும், ஒத்துக்கொண்ட சில கூட்டங்களுக்கும் செல்லஇயலாது என்பதையும் அறிவித்துக்கொள்ளுகிறார்.

### "நகர சபை"

சென்னை, ஜன. 8—

இன்று பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட் முன் 'நகர சபை' என்ற புதிய மாதம் இரு முறைப் பத்திரிகைக்கு ஆசிரியராகவும் பிரசுரகர்த்தாவாகவும் முல்லை-முத்தையா தம்மைப் பதிவு செய்து கொண்டார்.

Printed & Published by T. M. Parthasarath at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1